2020 மார்ச் 16]

உறுப்பினர் அவர்கள் பொறுமை காக்க வேண்டும். என்னுடைய துறை மானியக் கோரிக்கை, வரும் 30 ஆம் தேதி நடைபெறவிருக்கின்றது. அதுவரை பொறுமை காத்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே அதுகுறித்து எடுத்துச் சொல்லி, இதற்கு ஒரு நல்ல பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வழங்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

104—

குளிர்சாதனப் பேருந்து

***51984—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சலிலிருந்து திருப்பதிக்கு படுக்கை வசதி கொண்ட குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநிலங்களைப் பொறுத்தவரையில் அண்டை மாநிலங்களிடையே இதுவரை நடைபெற்ற ஒப்பந்தங்கள் (Inter–State Agreement) மூலமாக குளச்சலிலிருந்து திருப்பதிக்குப் பேருந்துகளை இயக்க அனுமதி பெறப்படவில்லை. எனவே, குளச்சலிலிருந்து திருப்பதிக்கு பேருந்துகள் இயக்க சாத்தியக்கூறு இல்லையென்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2020 மார்ச் 16

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் பகுதியிலிருந்து திருப்பதிக்கு படுக்கை வசதியுடன்கூடிய புதிய பேருந்து இயக்க வேண்டுமென்றும், அனைத்து ஜாதி மக்களும் ஐக்கியமாக வாழ்கின்ற குளச்சல் சட்டமன்றத் தொகுதியிலே, இந்து மக்கள் திருப்பதிக்கும், கிறிஸ்துவ மக்கள் வேளாங்கண்ணி மற்றும் கேரளாவில் உள்ள இடத்துவா, எர்ணாகுளம், சாலக்குடி பகுதிகளுக்கும், இஸ்லாமிய மக்கள் நாகூர் தர்காவிற்கும் சென்று வருவதற்குப் புதிய பேருந்துகளை இயக்க வேண்டுமென்று நான் கேள்வி கேட்டிருந்தேன். நிச்சயமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேருந்து வசதியினை ஏற்படுத்தித் தருவார் என்று நினைத்தேன். ஆனால், சாத்தியக்கூறுகள் இல்லையென்று மறுத்துவிட்டார்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல் என்பது, நாகர்கோவில் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 20 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள பகுதி. அது வளர்ந்து வரக்கூடிய நகரம். அந்தப் பகுதி வாழ் மக்கள் திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு அடிக்கடி சென்று தரிசிப்பது வழக்கம். அந்த மக்களுக்கு வசதியாகத்தான் இந்த கேள்வியை நான் தொடுத்தேன். ஆகவே, என்னுடைய கோரிக்கையை ஏற்று, அதை செய்துதர வேண்டும். தமிழ்நாட்டிலிருந்து கேரளாவிற்குச் சென்று மீன்பிடிக்கக்கூடிய மக்கள் எர்ணாகுளம் பகுதிக்குச் செல்கிறார்கள்; முனியம் பகுதிக்குச் செல்கிறார்கள்; கொச்சிக்குச் செல்கிறார்கள். இங்கு அவர்களுக்குத் தகுந்த வேலையில்லை. அவர்களுக்குத் தேவையான பணி கேரளாவில் இருக்கிறது. எனவே, அவர்கள் கேரளாவிற்குச் செல்வதற்கு நீங்கள் புதிய பேருந்தை இயக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கையை நீங்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து, திருப்பதிக்குச் செல்வதற்கு படுக்கை வசதியுடன்கூடிய புதிய குளிர்சாதனப் பேருந்தை இயக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் மீண்டும் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2020 மார்ச் 16]

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக நாகர்கோவிலிலிருந்து திருப்பதிக்கு இருமுனைகளிலிருந்தும் தலா ஒரு பேருந்து வீதம் 2 பேருந்துகள் தினசரி இயக்கப்படுகின்றன. மேலும், கன்னியாகுமரியிலிருந்து திருப்பதிக்கு குளிர்சாதன வசதியில்லாத, இருக்கை மற்றும் படுக்கை வசதிகளுடன்கூடிய இரண்டு பேருந்துகள் இருமுனைகளிலிருந்தும் தினசரி இயக்கப்படுகின்றன. எனவே, குளச்சலிலிருந்து திருப்பதி செல்லும் பயணிகள் சுமார் 19 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நாகர்கோவிலுக்கு புறநகர் பேருந்து வசதியினைப் பயன்படுத்திச் சென்று, மேற்கூறிய பேருந்துகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இயக்கக்கூடிய இரண்டு பேருந்துகளில் பயணிகளின் அடர்வும் மிகக் குறைவாக இருக்கிறது. சுமார் 70 சதவிகித பயணிகள் மட்டுமே பயணிக்கிறார்கள். இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, அதாவது, அண்டை மாநில–Inter–State Agreement–ன்படி பேருந்துகளை இயக்குவதற்கு வழிவகை இருக்கிறதா என்பதை ஆராய்ந்து, திருப்பதிக்குப் பேருந்துகளை இயக்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் குளச்சல் மற்றும் திங்கள் நகரில் 2 பணிமனைகள் இருக்கின்றன. அவற்றிலிருந்து 120–க்கும் அதிகமான பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அவை பல்வேறு பகுதிகளுக்குச் செல்கின்றன. ஆனால், இயக்கப்பட்டு வந்த 120 பேருந்துகளிலே இப்போது 22 பேருந்துகள் குறைக்கப்பட்டிருக்கின்றன என்ற கருத்தை தங்கள்முன் வைக்க விரும்புகிறேன். திங்கள் நகர், மேலகட்டிமாங்கோடு கிராமத்திற்குப் பேருந்து வசதியில்லை. அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்காக புதிய பேருந்து வசதி திங்கள் நகரிலிருந்தோ அல்லது குளச்சலிலிருந்தோ

நாகர்கோவிலுக்கு இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது சொந்த ஊரான சிராயன்குழி பகுதியிலிருந்து, குளச்சல் தொகுதியில் உள்ள முக்கியமான பகுதிகளுக்குச் செல்வதற்காக ஒரு பேருந்தை முன்னாள் அமைச்சர் அவர்கள் எங்களுக்குத் தந்தார். அந்தப் பேருந்து நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பேருந்து தடம் எண் 386; அதை மீண்டும் இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, மார்த்தாண்டம், பள்ளியாடி, கஞ்சிகுழி வழியாக ஆசாரிபள்ளத்திற்கு இயக்கப்பட்டு வந்த தடம் எண் 11L பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது. அதை மீண்டும் இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, தக்கலை, கஞ்சிக்குழி, கருங்கல் வழியாகச் சென்று கொண்டிருந்த தடம் எண் 46B பேருந்து இயக்கப்படவில்லை. அதேபோன்று, முக்கியமான பகுதியான குளச்சலிலிருந்து கோணங்காடு பகுதிக்கு இயக்கப்பட்டு வந்த தடம் எண் 5 சரியாக இயக்கப்படவில்லை. அதையும் சரிவர இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திங்கள் நகர், பட்டரவிளை, வெள்ளிமலை பகுதிகளுக்குச் செல்கின்ற பேருந்தை முறையாக இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

எனது தொகுதியில் இயக்கப்பட்டு வந்த மிக முக்கியமான தடம் TSS 46–தக்கலை–மார்த்தாண்டம் பேருந்தினை இயக்க வேண்டுகிறேன். திங்கள் நகரிலிருந்து நாகர்கோவில் செல்லக்கூடிய தடம் 12–H பேருந்தினை இயக்க வேண்டுகிறேன். அடுத்து, Bus fare–ஐ நீங்கள் மறைமுகமாக உயர்த்தியிருக்கின்றீர்கள். புதிய பஸ்களைத் தந்திருக்கின்றீர்கள்; அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் தெரியாமல் பஸ்ஸில் ஏறிவிட்டு, அடுத்த stopping–ல் இறங்கினால் 11 ரூபாய் கொடுக்க வேண்டியுள்ளது. நீங்கள் பஸ் கட்டணத்தை மறைமுகமாக உயர்த்தியிருக்கின்றீர்கள். அதனால், கிராமத்து மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே நீங்கள் மறைமுகமாக உயர்த்தியுள்ள பேருந்துக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், என்னுடைய தொகுதியில் நிறுத்தி வைத்திருக்கின்ற முக்கியமான அனைத்துப் பேருந்துகளையும் மக்களுக்குப் பயன்படுகின்ற வகையில் மீண்டும் இயக்க நீங்கள் முன்வர வேண்டும். ஏனென்றால், உங்களது கோரிக்கையினை

2020 மார்ச் 16]

ஏற்று, இரண்டு bus depots–க்கும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நான் நிதியினைக் கொடுத்திருக்கின்றேன். எனவே, என்னுடைய கோரிக்கையினை தயவுசெய்து பரிசீலிக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைச் சொல்கிறார். மறைமுகமாக பேருந்துக் கட்டணத்தை உயர்த்தியிருக்கின்றோம் என்று சொல்கின்றார். எந்த வழித்தடத்தில் அதுபோன்று உயர்த்தப்பட்டுள்ளது என்று எழுத்துப்பூர்வமாக, ஆதாரப்பூர்வமாகக் கொடுத்தால், அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், குறிப்பிட்ட வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க வேண்டும் என்று ஒரு list–ஐ அவர் என்னிடத்தில் கொடுத்திருக்கின்றார். தேவை இருக்கின்ற வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படும் என்ற உறுதியினை அவரிடம் நான் தந்திருக்கின்றேன். எனவே, முக்கியமான வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

105—

மாணவர் விடுதி

***35573—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—